**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை:- திரு. பா. பாலமுருகன், B.Com., B.L.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2022 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 08 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**<u>I.A.No. 3/2022 In O.S.No. 52/ 2016</u>**

1) மாரிமுத்து, குடும்ப மேலாளர்

2) சின்னதுரை (எ) முத்து கிருஷ்ணன்

3) நடராஜன்

4) அமிர்தசாமி (எ) சுந்தரம் ..... மனுதாரர்கள்

/எதிர்/

1) மல்லா நாயக்கர்

2) வட்டாட்சியர், கடவூர்

3) வருவாய் கோட்டாட்சியர், குளித்தலை

4) மாவட்ட ஆட்சியர், கரூர்

5) ஆணையர், Land Administration, சேப்பாக்கம், சென்னை

..... எதிர்மனுதாரர்கள்

1) பாப்பாத்தி

2) சேகர்

3) நீலாவதி

....... புரோபோஸ்ட் பார்ட்டீஸ்/1 ம் பிரதிவாதியின் வாரிசுகள்

இம்மனு என் முன்பாக 28.10.2022 ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு .M. குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துள்ள நிலையில், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் PP1 முதல் PP3 ஆகியோர்களை தோன்றாத்தரப்பினராகக் கொண்டும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## ஆணையுரை

மனுவில் கண்டபடி இறந்துபோன 1ம் பிரதிவாதிக்கு, வாரிசுதாரர்களை சேர்த்து வழக்கினை மேல்நடத்த கேட்டு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 22 விதி 4 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

1. மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1ம் பிரதிவாதியான மல்லா நாயக்கர் 08.02.2022 அன்று இறந்து விட்டார். இறந்து போன மல்லா நாயக்கர் வாரிசுகளான பாப்பாத்தி, சேகர் மற்றும் நீலாவதி ஆகியோர்கள் இவ்வழக்கிற்கு அவசியமான தரப்பினர்கள் ஆவார்கள். எனவே இறந்துபோன 1ம் பிரதிவாதிக்கு மேற்கண்ட நபர்களை வாரிசுதாரர்களாக ஏற்று வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரை ஆட்சேபனையின் சுருக்கம்**

2. இம்மனு சட்டப்படி நிலைக்கக்கூடியது அல்ல. மனுதாரரின் மனுவில் கண்ட பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல. மேற்படி மனு உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் வேண்டுமென்று எவ்வித காரணமின்றி வாரிசுகளை சேர்க்க மனு தாக்கல் செய்துள்ளார்கள். எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்வைக்கப்படவில்லை.

4. தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. தாவா அசல் வழக்கானது விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றம் செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது நிலுவையில் உள்ள நிலையில், 1ம் பிரதிவாதி 08.02.2022 ம் தேதியில்

இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளான பாப்பாத்தி, சேகர் மற்றும் நீலாவதி ஆகியோர்களை வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டுமென்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விசாரணையை காலம் கடத்தும் நோக்குடன் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தரப்பில் முன் வைக்கப்பட்டது. பொதுவாக ஒரு வழக்கில் ஒரு நபர் இறந்துவிடும் பட்சத்தில் அவரது வாரிசுகளை தரப்பினராக சேர்க்கவேண்டியது சட்ட நடைமுறையாகும். எனவே, நீதியின் நலன் கருதி 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துக்கொள்ள இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக,**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிறகு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2022 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 08 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

Sd/- P. பாலமுருகன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குளித்தலை.

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | - இல்லை |
| மனுதாரர் தரப்பு சான்றாவணம் | -இல்லை |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி | -இல்லை |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் | -இல்லை |

Sd/- P. பாலமுருகன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குளித்தலை.